*1*

# நியாயப்பிரமாணப் புத்தகங்கள்

*தொடங்குவதற்கு: வசனப்பகுதியானது, எடுத்துரைப்பின் பகுதியாக உள்ளதா அல்லது நியாயப்பிரமாணங்களின் ஒரு பகுதியாக உள்ளதா என்பதை முடிவுசெய்துகொள்ளுங்கள். பாடத்தின் முடிவுப்பகுதியில் உள்ள ஒரு கலந்துரையாடல், எடுத்துரைப்புப் பகுதிகளுக்கு விளக்கம் அளிப்பதில் உதவிநிறைந்ததாக இருக்கும், ஆனால் இந்தப் பாடமானது, ஐந்தாகமத்தின் சட்டரீதியான பாடங்கள் காணப்படும் வசனப்பகுதிகளுக்கு விளக்கம் அளிக்க அத்தியாவசியமான அஸ்திபாரத்தை அளிப்பதற்கென்று முதன்மையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

## ஒரு அறிமுகம்

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள் நியாயப்பிரமாணப் புத்தகங்கள் அல்லது எபிரெய வேதாகமத்தில் தோரா என்று அறியப்பட்டுள்ளன. மேலும் அவைகள் "ஐந்தாகமம்" - இது "ஐந்து தொகுதிகளைக் கொண்ட புத்தகம்" என்று அர்த்தப்படும் வார்த்தையாகும் - என்றும் அழைக்கப்படுகின்றன. இத்துடன் கூடுதலாக, வேதவசனங்களின் இந்தப் புத்தகங்களை மோசே எழுதினார் என்று அவருக்கு மதிப்பளிக்கும் வகையில் இவைகள், "மோசேயின் புத்தகங்கள்" என்றும் அறியப்படுகின்றன. நியாயப்பிமாணத்தின் ஐந்து புத்தகங்களிலும் அடங்கியுள்ளது என்ன?

*ஆதியாகமம்* என்ற புத்தகம், - படைப்பு, மனிதகுலத்தின் வீழ்ச்சி, மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகிய - மிகத்தொடக்ககால வரலாற்றையும், ஆபிரகாமுக்கு விடுக்கப்பட்ட அழைப்பில் தொடங்கி யோசேப்பின் வரலாறு மற்றும் யாக்கோபின் குடும்பம் எகிப்திற்கு இடம் பெயருதல் வரை, எபிரெய மக்களின் தோற்றம் பற்றிய விபரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்கிறது. "Genesis" என்ற வார்த்தை "தொடக்கம்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் ஆதியாகமம் குறிப்பிடத்தக்க பல "தொடக்கங்களை" பதிவுசெய்கிறது.

*யாத்திராகமம்* என்ற புத்தகம், எகிப்தில் எபிரெய மக்களின் வரலாற்றைத் தொடருகிறது, இது அவர்கள் எகிப்தில் இருந்து விடுதலையானதை (விடுதலைப்பயணம்), அவர்கள் சீனாய் மலைக்குப் பயணமானதை, சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் தரப்பட்டதை மற்றும் ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்டதைப் பற்றிக் கூறுகிறது.

*லேவியராகமம்* என்ற புத்தகம், சீனாய் மலையில் தரப்பட்ட மற்ற நியாயப்பிரமாணங்கள் பலவற்றைப் பதிவு செய்கிறது. இது ஆசாரியத்துவ இனமான லேவியின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது. ஆராதனை தொடர்பான பல நியாயப்பிரமாணங்கள் ஆசாரியர்களால் கவனித்து நடத்தப்பட வேண்டி இருந்தன.

*எண்ணாகமம்* என்ற புத்தகம், சீனாய் மலையில் இருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் எல்லைக்குப் பயணம் சென்றது, அந்த

நாட்டிற்குள் பிரவேசிப்பதில் இஸ்ரவேல் மக்கள் தவறியமை, வனாந்தரத்தில் அவர்களின் வருடங்களின்போது அவர்களின் அனுபவங்கள் மற்றும் கானான் நாட்டின் எல்லைக்கு அவர்கள் திரும்புதல் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது. இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள இரு "எண்ணிக்கையிடுதல்" அல்லது மக்கள்தொகைக் கணக்கெடுத்தல் என்பதன் அடிப்படையில் இந்தப் புத்தகத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

*உபாகமம்* என்ற புத்தகம், இஸ்ரவேல் மக்கள் கானான் என்ற வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்கத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த வேளையில் நியாயப்பிரமாணம் "இரண்டாவது முறையாகத் தரப்பட்டது" பற்றிக் கூறுகிறது. இது பெரும்பாலும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்படி இஸ்ரவேல் மக்களுக்கு மோசே கூறிய புத்திமதிகள் அடங்கிய அவரது உரைகளையே கொண்டுள்ளது.

## நியாயப்பிரமாணத்தின் சில பண்புகள்

இந்த ஐந்து புத்தகங்களிலும் நியாயப்பிரமாணத்தைத் தவிர, பாடல் மற்றும் எடுத்துரைப்புகள் போன்ற மற்ற பாடங்களும் அடங்கியுள்ளன. இருப்பினும் இவற்றில் பெரும்பான்மையாக சட்டரீதியான பாடக்கருத்துக்களே மேலாதிக்கம் செலுத்துவதால், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கு எவ்வாறு விளக்கம் அளிப்பது என்பதன் மீது நாம் கவனம் குவிப்போம். இவ்வேளையில் நாம், நியாயப்பிரமாணத்தின் பத்து பண்புகள் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக:

1. பழைய ஏற்பாட்டுடன் தொடர்புடைய "நியாயப்பிரமாணம்" என்பதற்கான குறிப்புகள், மோசேயின் மூலமாகத் தேவனால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணங்களின் தொகுப்பைக் குறிக்கின்றன. இவைகள் இஸ்ரவேல் மக்கள் எகிப்திய அடிமைத் தளையில் இருந்து விடுதலையானதை தொடர்ந்து சீனாய் மலையில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

2. நியாயப்பிரமாணம், சீனாய் மலையில் (யாத்திராகமம் 19) தேவன் இஸ்ரவேல் மக்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையிலானதாக உள்ளது (மற்றும் சிலவேளைகளில் "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தை இந்த உடன்படிக்கை என்ற வார்த்தையின் அர்த்தமாகப் பயன்படுத்தப்படுகிறது). இஸ்ரவேல் மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார் என்று தேவன் ஒப்புகை அளித்தார் என்பதே இந்த உடன்படிக்கையின் எளிய வடிவமாக உள்ளது. தேவன் கட்டளையிட்டபடி எல்லாம் தாங்கள் செய்வோம் என்று இஸ்ரவேல் மக்கள் உறுதியளித்து அந்த உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டனர். அந்த உடன்படிக்கை, பழைய ஏற்பாட்டு வரலாற்றைப் பற்றிய புரிந்துகொள்ளுதல் யாவற்றிற்கும் ஆதாரத்தை அளிக்கிறது. இந்த உடன்படிக்கை பல்வேறு சந்தர்ப்பங்களில் புதுப்பிக்கப்பட்டு அதிகமாக்கப் பட்டாலும், இது மாறாது இருந்தது.

3. நியாயப்பிரமாணத்தை ஏற்படுத்தும் தனித்தனிச் சட்டங்கள், பழைய ஏற்பாட்டின் பின்வரும் நான்கு புத்தகங்களில் காணப்படுகின்றன: யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம். (இந்த நான்கு புத்தகங்களிலும், நியாயப்பிரமாணத்திற்கு அப்பால் மற்ற வகையான பாடங்களும் அடங்கியுள்ளன.)

4. பல்வேறு வகையான விதிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. நான்கு

புத்தகங்களிலும் காணப்படும் பிரமாணங்கள் பொதுவாக இரு வகைப்பட்டவை என்று நினைக்கப்படுகின்றன: “apodictic” (அல்லது “apodeictic”) மற்றும் “casuistic” பிரமாணம்.[1] “Apodictic” என்பவை “விபசாரம் செய்யாதிருப்பாயாக” என்பது போன்ற பத்துகட்டளைகளில் உள்ள பிரமாணம் போன்றவைகளாக உள்ளன. “Casuistic” என்பவை “குறிப்பிட்ட விஷயத்திற்காக பிரமாணங்கள்” என்பவைகளாக உள்ளன; இவைகள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை விவரிக்கின்றன - வழக்கமாக இவை “போது” அல்லது “ஆல்” என்ற உள் வாக்கியங்களில் உள்ளன - மற்றும் இவைகள் பின்பு அந்த விஷயத்தின் விளைவுகளைத் தருகின்றன. யாத்திராகமம் 21:28, 29ம் வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றன,

> ஒரு மாடு ஒரு புருஷனையாவது ஒரு ஸ்திரீயையாவது முட்டினதினால் சாவுண்டானால், அந்த மாடு கல்லெறியப்படவேண்டும், அதின் மாம்சம் புசிக்கப்படலாகாது; அப்பொழுது மாட்டின் எஜமான் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான். தன் மாடு வழக்கமாய் முட்டுகிற மாடாயிருந்து, அது அதின் எஜமானுக்கு அறிவிக்கப்பட்டும், அவன் அதைக் கட்டி வைக்காததினால், அது ஒரு புருஷனையாவது ஒரு ஸ்திரீயையாவது கொன்று போட்டால், மாடும் கல்லெறியப்படவேண்டும், அதின் எஜமானும் கொலை செய்யப்படவேண்டும்.

இந்தப் புத்தகங்களில், சட்டரீதியான முன்நிகழ்வுகளும் அடங்கியுள்ளன. பல சந்தர்ப்பங்களில், தனிநபர்கள் தவறு செய்தபோது, அவர்களைத் தேவன் உடனடியாகத் தண்டித்தார் அல்லது அவர்கள் எவ்வாறு தண்டிக்கப்பட வேண்டும் என்று பிற்பாடு அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார் (காண்க லேவியராகமம் 10; எண்ணாகமம் 15:32-36). உறுதியாகவே இந்த நிகழ்வுகள், பிரமாணத்தில் பின்பு செயல்விளைவைக் கொண்டிருந்த முன்நிகழ்வுகளை நிலைநாட்டின. இஸ்ரவேல் மக்களுக்கு சரியானதாக மற்றும் தவறானதாக இருந்தது எது என்பதை நிலைநாட்ட, மற்ற எடுத்துரைப்புகளும் அர்த்தப்படுத்தப்பட்டுள்ளன.

5. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் எஞ்சியுள்ள மற்றவைகள் நியாயப்பிரமாணத்துடன் எதையும் கூட்டவோ அல்லது அதிலிருந்து எதையும் எடுத்துப் போடவோ இல்லை. பல்வேறு தீர்க்கதரிசிகள் மக்களைக் கட்டுவிக்கும் புதிய பிரமாணங்களை அறிவிக்கவில்லை, ஆனால் நியாயப்பிரமாணத்தை விளக்கி உரைத்தனர் மற்றும் ஒரு கருத்தில் அவர்கள் நியாயப்பிரமாணத்தை அமுல்படுத்தினர்.

6. நியாயப்பிரமாணம் ஒரு நல்ல பிரமாணமாக இருந்தது - அது இஸ்ரவேல் மக்களின் நன்மைக்கானதாக, அந்தப் பிரமாணத்திற்காக இஸ்ரவேல் மக்கள் நன்றிசெலுத்துமளவுக்கு மிகச்சிறப்பானதாக இருந்தது. புதிய ஏற்பாடு வேறுவிதமாகக் கூறுவதில்லை; புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டைவிட மேன்மையானதாக இருந்தது என்று அறிவிக்கும்போது, அது பழைய ஏற்பாடு நல்லதாக இருந்தது என்றே மறைமுகமாக உணர்த்துகிறது.

7. மோசேயின் பிரமாணம் சட்டரீதியான முதல் தொகுப்பாக இருக்கவில்லை. ஹம்முரபியின் சட்டத் தொகுப்பு (கி.மு. 1600) போன்ற மற்றவைகள், ஏற்கனவே இருந்தன. மோசேயின் பிரமாணம் அல்லது பழைய ஏற்பாட்டின் தனித்தனிப் பிரமாணங்களை நாம் மற்ற சட்டத் தொகுப்புகளுடன் நாம் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பார்க்க முடியும்.

*8. கோர்டன் ஃபீ மற்றும் டக்ளஸ் ஆகியோர் கூறியபடி, பிரமாணம் என்பது, ''உருமாதிரியான எடுத்துக்காட்டாக'' இருந்தது.[2] அது சாத்தியமான எல்லாச் சூழ்நிலைகளையும் எடுத்துரைத்து முடிவதற்கு மாறாக இனிவர இருக்கும் காலங்களுக்கு ஒரு மாதிரியாகப் பயன்பட்டது. எடுத்துக்காட்டாக, நியாயப்பிரமாணம் "நீ புதுவீட்டைக் கட்டினால், ஒருவன் உன் மெத்தையிலிருந்து விழுகிறதினாலே, நீ இரத்தப்பழியை உன் வீட்டின்மேல் சுமத்திக்கொள்ளாதபடிக்கு, அதற்குக் கைப்பிடிச்சுவரைக் கட்டவேண்டும்" என்று கூறுகிறது (உபாகமம் 22:8). ஒரு "கைப்பிடிச்சுவர்" என்பது உயரம் குறைந்த சுவராக இருந்தது. இந்தச் சட்டம், இஸ்ரவேல் மக்கள் சமதளக் கூரை கொண்ட வீடுகளில் வாழ்ந்து, மற்ற நோக்கங்களுக்காக உபயோகப்படுத்திய காலத்துடன் தொடர்புடையதாக உள்ளது. கூரையின் மீது மக்களைப் பாதுகாப்பாகக் காக்க வேண்டும் என்பதே இந்தச் சட்டத்தின் நோக்கமாக இருந்தது; உயரம் குறைந்த சுவர், அவர்கள் கூரையில் இருந்து விழுதலில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும். யூதர்கள் சமதளமற்ற கூரை கொண்ட வீடுகளில் வாழாத காலங்கள் மற்றும் இடங்கள் பற்றிய விஷயம் என்ன? அந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்டம் அர்த்தமற்றதாக ஆனதா? இந்தச் சட்டத்தின் பின்னால் உள்ள கருத்து இன்னமும் நடைமுறையில் இருக்கும்: அவர்கள் தங்கள் வீடுகளில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்கும் வகையில் தங்கள் வீடுகளைக் கட்ட வேண்டியவர்களாக இருந்தனர். "கைப்பிடிச்சுவர்" என்பது உருமாதிரியான எடுத்துக்காட்டாக இருந்தது; அது இஸ்ரவேல் மக்கள் பாதுகாப்புப் பற்றிய உணர்வுடையவர்களாக இருக்க, அவர்கள் வீடுகளில் இருக்கும் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் கண்ணோட்டத்துடன் தங்கள் வீடுகளைக் கட்டக் காரணமாகும் நோக்கம் கொண்டிருந்தது.*

*9. நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டதைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி மீறப்பட்டது. ஆகவே பழைய ஏற்பாட்டின் காலகட்டத்தில் (புதிய ஏற்பாட்டின் காலகட்டத்தைக் காட்டிலும் அதிகம் குறைவாக) அவற்றின் நடைமுறைப்படுத்தல் என்பது, அவற்றிற்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங்கொண்டிருந்தபடி, தனித்தனிப் பிரமாணங்களின் அர்த்தத்திற்கு ஒளியூட்டின என்று நாம் யூகிக்க இயலாது. மற்றும் யூதர்கள் - நியாயப்பிரமாணத்தைப் பற்றிய ரபீக்களின் விளக்கத்தை இயேசு புறக்கணித்தார் என்ற விஷயத்துடன் - மிகவும் அடிக்கடி கீழ்ப்படிந்தனர் என்ற உண்மையானது, ரபீக்களின் விளக்கம் (தல்மூத் புத்தகத்தில் காணப்படுவது போன்றவை) விமர்சனம் இல்லாது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று யூகித்தலுக்கு எதிராக நம்மை எச்சரிக்க வேண்டும்.*

*10. நியாயப்பிரமாணத்தின் ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறைரீதியான நிபந்தனைகள், நாம் வாழும் புதிய உடன்படிக்கையின் ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறைரீதியான நிபந்தனைகளைப் போன்றவைகளாகவே உள்ளன.*

## *நியாயப்பிரமாணத்துடன் நமது உறவு*

*நாம் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கு விளக்கம் அளிக்கும் போது, நமது முதல் கேள்வி, "இந்தப் பிரமாணங்கள் நமக்கு நடைமுறைப் படுகின்றனவா?" என்பதைப் போன்றதாக இருக்க வேண்டும். மோசேயின் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்துடன் நமது உறவு என்னவாக*

உள்ளது? நியாயப்பிரமாணம் எடுத்துப் போடப்பட்டது என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது; ஆகவே பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் எதுவும் இன்றைய நாட்களில் மக்களுக்கு நேரடியாக நடைமுறைப்படுவது இல்லை. ஃபீ மற்றும் ஸ்டூவர்ட் ஆகியோர், பின்வரும் மேன்மையான ஆறு கருத்துக்களை ஏற்படுத்தினர்:

> 1. *பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் ஒரு உடன்படிக்கையாக உள்ளது.*
> ...
>
> 2. *பழைய ஏற்பாடு நமது ஏற்பாடாக இருப்பதில்லை.* ...
> உண்மையில், அதன் நிபந்தனைகள் (சட்டங்கள்) *எதுவும்* புதிய ஏற்பாட்டில் *புதுப்பிக்கப் பட்டிராத வரையில்,* அவைகள் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன என்று நாம் யூகிக்கக் கூடாது. அதாவது, பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் ஒன்று, புதிய ஏற்பாட்டில் ஏதாவது ஒருவகையில் மறுபடியும் உரைக்கப்படாத அல்லது மறுவலியூட்டப் படாத வரையில், அது தேவனுடைய மக்களை நேரடியாகக் கட்டுப்படுத்துவது இல்லை (இ. வ. ரோமர் 6:14-15). ...
>
> 3. *இரு வகையான பழைய உடன்படிக்கையின் நிபந்தனைகள், புதிய உடன்படிக்கையில் தெளிவாக புதுப்பிக்கப் பட்டிருக்க வில்லை.* ... பஞ்சாகமத்தில் உள்ள, இனியும் நடைமுறையில் இல்லாத பிரமாணங்களின் பகுதியானது வசதியான வகையில் இரு வகைகளாகக் குழுப்படுத்தப் படலாம்: (1) இஸ்ரவேல் மக்களின் குடிமைச் சட்டங்கள் மற்றும் (2) இஸ்ரவேல் மக்களின் மதச்சடங்குரீதியான சட்டங்கள். ...
>
> 4. *பழைய உடன்படிக்கையில் ஒரு பகுதியானது, புதிய உடன்படிக்கையில் புதுப்பிக்கப் பட்டுள்ளது.* ...
>
> 5. *பழைய ஏற்பாட்டின் பிரமாணம் இனியும் நமக்குத் தேவனுடைய கட்டளையாக இராதிருப்பினும், அவையாவும் இன்னமும் நமக்குத் தேவனுடைய வார்த்தையாகவே உள்ளன.* ...
>
> 6. *பழைய ஏற்பாட்டில் இருந்து வெளிப்படையாகப் புதுப்பிக்கப்பட்டது மாத்திரமே புதிய ஏற்பாட்டு "கிறிஸ்துவின் பிரமாணத்தினுடைய" பகுதியென்று கருதப்பட முடியும் (இ. வ கலாத்தியர் 6:2).*[3]

பழைய ஏற்பாட்டில் உள்ள ஒழுக்கரீதியான தனித்தனிப் பிரமாணங்களை நாம் சட்டரீதியாகக் கட்டுவிப்பவைகளாகக் காணக்கூடாது என்றாலும், குறிப்பிட்ட ஒழுக்கவீன நடைமுறைகள் குறித்துத் தேவனுடைய எண்ணப்போக்கு பற்றிய சில விஷயங்களை அந்தப் பிரமாணங்களில் இருந்து நாம் காண முடியும். பழைய ஏற்பாட்டில் உள்ள பிரமாணங்கள், தேவனுடைய இயல்பைப் பிரதிபலிக்கும் கொள்கைகள் மற்றும் மனித இருப்பு பற்றித் தேவனுடைய கண்ணோட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன. மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட பிரமாணம் (இன்று நம்மை) கட்டுப்படுத்தாதிருக்கும் அதே வேளையில், அதன் கொள்கைகள் அறிவுறுத்துபவையாகவே நிலைத்துள்ளன.

## பிரமாணங்களுக்கு விளக்கம் அளித்தல்

பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களுக்கு விளக்கம் அளித்தல் பற்றி நாம் எவ்வாறு செல்கிறோம்? இங்கு சில உதாரணங்களுடன் இரு கருத்து ஆலோசனைகள் தரப்படுகின்றன.

1. *பிரமாணத்தை அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் புரிந்துகொள்ளுதல் என்பது, சட்டரீதியான ஒரு வசனப்பகுதிக்கு விளக்கம் அளித்தலில் முதல் அக்கறையாக இருக்க வேண்டும்.* அது இஸ்ரவேல் மக்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன? அது எவ்வாறு செயல்பட்டது அல்லது அது எவ்வாறு செயல்பட வேண்டியதாக இருந்தது?

இயேசு, "தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்று கூறியபின்பு, பரிசேயர்கள், "அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்?" என்று கேட்டனர். அதற்கு இயேசு, "உங்கள் மனைவிகளைத் தள்ளி விடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" என்று பதில் அளித்தார் (மத்தேயு 19:7, 8). இங்கு கலந்துரையாடலில் உள்ள பழைய ஏற்பாட்டு வசனப்பகுதி உபாகமம் 24:1-4 ஆகும்:

> ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்டபின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம், அவள் அவனுடைய வீட்டைவிட்டு போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம். அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டாலும், அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்துபோனாலும், அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது; அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தின்மேல் பாவம் வரப்பண்ணாயாக.

இந்தப் பிரமாணம் எவ்வாறு விளக்கப்படுத்தப்பட வேண்டும்? இதன் தோற்றகாலச் சந்தர்ப்பப் பொருளில் இது, ஒரு மனிதன் தனது மனைவியை தள்ளிவிடுவது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா இல்லையா என்பதைப் பற்றியதல்ல, அல்லது இது ஒரு மனிதன் தள்ளிவிடப்பட்ட தனது மனைவிக்குத் தள்ளுதற்சீட்டைக் கொடுப்பது அவசியமா இல்லையா என்பதைப் பற்றியதும் அல்ல. இவ்விரு நடைமுறைகளும் இந்தப் பிரமாணத்தினால் யூகிக்கப்பட்டிருந்தன. மாறாக, ஒரு மனிதன் தனது மனைவியைத் தள்ளிவிட்டு, அவள் இன்னொருவனைத் திருமணம் செய்துகொண்டால், அந்த முதல் கணவன் அவளைத் திரும்பச் சேர்த்துக்கொள்ள இயலாது என்பதே இந்தப் பிரமாணத்தின் கருத்தாக இருந்தது. "அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால்" என்பதன் மூலம் அர்த்தப்படுத்தப்பட்டது என்ன என்பது பற்றி யூதர்கள் கருத்து வேறுபட்டதால்,

இவ்வசனப் பகுதி யூதர்கள் மத்தியில் ஒரு போர்க்களம் ஆகியிருந்தது. தள்ளுதற்சீட்டு கொடுப்பதை நியாயப்படுத்திய "இலச்சையான காரியத்தின்" வகை என்ன?

நாம் உபாகமம் 24:1-4 வசனப்பகுதிக்கு விளக்கம் அளிக்கும்போது, முதல் நூற்றாண்டில் இவ்வசனப்பகுதி குறித்து யூதர்கள் ஈடுபட்டிருந்த விவாதத்தில் நுழைதல் என்பது நமது முதன்மைப் பணிப்பொறுப்பாக இருப்பதில்லை, ஆனால் கிறிஸ்துவுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தேவன் யூதர்களுக்கு என்ன கூறினார் என்பதைப் புரிந்துகொள்ள முயற்சித்தலே நமது முதன்மைப் பணிப்பொறுப்பாக உள்ளது. இந்தப் பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம், இந்தப் பிரமாணத்தை அதன் கலாச்சார மற்றும் வரலாற்று ரீதியான காட்சி அமைவில் புரிந்துகொண்டு, பின்பு இதே பிரமாணம் மற்ற காட்சி அமைவுகளில் நடைமுறைப்படுத்தப் படுவது எப்படி என்பதைத் தீர்மானித்தல் அவசியமாக உள்ளது.

நமது அனுபவங்கள், குறிப்பிட்ட பிரமாணங்களைப் புரிந்துகொள்ள நமக்கு உதவும் என்று நாம் யூகிக்க முடியாது. எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டின் பல சட்டங்கள் அடிமைத்தனம் பற்றியவையாக உள்ளன. அவற்றை நாம் வாசிக்கும்போது, அமெரிக்க நாட்டில் உள்நாட்டுப் போருக்கு முன்னர் நிலவிய அடிமைத்தன வகையைப் பற்றி நாம் நினைக்கலாம். இருப்பினும் பிரமாணத்தில் பேசப்பட்ட அடிமைத்தனம் என்பது மிகவும் சமீப காலத்தில் நடைமுறையில் இருந்த அடிமைத்தனம் போன்றதாக இருப்பதில்லை.

2. *பிரமாணத்தை அதன் சொந்தக் காட்சி அமைவில் நாம் புரிந்துகொண்ட பின்பு, அது இன்றைய நாட்களில் உள்ள மக்களுக்குக் கொண்டுள்ள நடைமுறைப் பயன்பாடு என்ன என்று நாம் கேட்க முடியும்.* யாத்திராகமம் 22:2, 3அ வசனப் பகுதி பின்வருமாறு கூறுகிறது:

> திருடன் கன்னமிடுகையில் கண்டுபிடிக்கப்பட்டு, அடிக்கப்பட்டுச் செத்தால், அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமராது. சூரியன் அவன்மேல் உதித்திருந்ததானால், அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமரும்; திருடன் பதில் கொடுத்துத் தீர்க்கவேண்டும்.

இந்தப் பிரமாணம் கேட்டுக்கொள்வது என்ன? இவ்வசனப்பகுதி, களிமண்ணினால் கட்டப்பட்ட ஒரு வீட்டில் குடியிருந்த ஒரு இஸ்ரவேல் குடும்பத்தைச் சித்தரிக்கிறது. ஒரு திருடன் அந்த வீட்டினுள் நுழைவதற்காக, சுவரிலோ அல்லது கூரையிலோ ஒரு கன்னம் தோண்டுகிறான். அவன் இரவில் அவ்வாறு செய்து, வீட்டு உரிமையாளரால் அடிக்கப்பட்டு, அதன்விளைவாக இறக்கிறான்[4] என்றால், அவனது சாவுக்கு வீட்டின் உரிமையாளர் குற்றம் சாட்டப்பட மாட்டார். இதே விஷயம் பகல் வெளிச்சத்தில் நடைபெறுகிறது என்றால், வீட்டின் உரிமையாளர் கள்ளனைக் கொன்றதாகப் பழிசுமத்தப்படுவார். இந்த வேறுபாடு இருப்பது ஏன்? இரவில் வீட்டு உரிமையாளர், கள்ளன் என்ன செய்கிறான் என்பதை உறுதியாகக் காணவோ அல்லது அறியவோ இயலாது; அவன் அந்தக் குடும்பத்தைக் கொல்வதற்காக வீட்டை உடைத்து உட்புகலாம். அவனைக் கொல்லப் போதுமான அளவுக்கு நன்கு அடித்தல் என்பது சுயபாதுகாப்பு என்ற வகையில் உய்த்துணரப்பட முடியும். இருப்பினும் பகல் வேளையின்போது வீட்டின் உரிமையாளர் தெளிவாகக் காணமுடியும்; ஆகவே

அவர் கள்ளனின் நோக்கங்களை அதிகம் துல்லியமாகக் கணக்கிட முடியும். தமது குடும்பத்தைக் கொல்வதை நோக்கமாகக் கொண்டிராத ஆனால் தங்களின் உடைமைகளை மாத்திரமே எடுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்த ஒருவனின் உயிரை எடுக்க அவர் உரிமை கொண்டிருப்பதில்லை.

இந்தப்பிரமாணத்தை இன்றைய நாட்களில் நமது சூழ்நிலைக்கு எவ்வாறு நாம் நடைமுறைப்படுத்தலாம்? இந்த பிரமாணங்களின் பின்னால் இருக்கும் கொள்கைகள் இன்றைக்கும் உண்மையாக உள்ளன. இவைகள் தேவனுடைய சிந்தனையைப் பிரதிபலிக்கின்றன மற்றும் தேவன் (நேற்றும் இன்றும் என்றும்) மாறாதவராக இருக்கிறார். இதன் விளைவாக, யாத்திராகமம் 23:2, 3ன் பிரமாணம் இன்று நம்மைக் கட்டுப்படுத்துவது இல்லை என்றாலும், இது குறிப்பிட்ட சத்தியங்களையும் மதிப்பீடுகளையும் நமக்குப் போதிக்கிறது. (1) தனிநபர்கள் உடைமையைக் கொண்டிருக்கவும் அவற்றைப் பாதுகாக்கவும் உரிமை கொண்டுள்ளனர் என்பதைத் தேவன் ஏற்றுக்கொள்கிறார் மற்றும் அந்த உரிமை அவரது பிரமாணங்களில் உள்ளது. (2) தனிநபர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை கொண்டுள்ளதைத் தேவன் ஏற்றுக்கொள்கிறார். (3) தேவன் மனிதர்களின் உயிரைப் பாதுகாக்கிறார்; ஒருவர் தற்செயலாக ஒரு உயிரைக் கொன்றிருந்தாலும், உயிரைக் கொல்லும் செயலுக்குத் தண்டனைகளைப் பிரமாணம் உள்ளடக்கி இருக்கிறது. (4) *மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், இந்த பிரமாணம், தேவனுடைய பார்வையில், மனிதனின் உயிரானது உடைமையைக்காட்டிலும் அதிக மதிப்புடையது என்று விவரிக்கிறது.* குறிப்பாக, இன்னொருவரின் உயிரானது ஒருவரின் சொந்த உடைமையை விட அதிக மதிப்புள்ளது என்பதை நாம் காணுகிறோம்.

## பிரமாணத்திற்கு விளக்கம் அளிப்பதில் “செய்ய வேண்டியவைகள்” மற்றும் “செய்யக்கூடாதவைகள்”: ஒரு தொகுப்புரை

நிறைவாக, பிரமாணத்தில் காணப்படும் வசனப்பகுதிகளுக்கு விளக்கம் அளிப்பது குறித்து, ஃபீ மற்றும் ஸ்டுவார்ட் அவர்களால் முன்மொழியப்பட்ட பின்வரும் ‘‘செய்ய வேண்டியவைகள்’’ மற்றும் ‘‘செய்யக்கூடாதவைகள்’’ ஆகியவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்:

1. பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தை *உங்களுக்காக* முழுமையாக ஏவுதல் பெற்ற தேவனுடையது என்பதாகக் கண்ணோக்குங்கள்.
   பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தை *உங்களுக்குத்* தேவன் கொடுத்த நேரடியான கட்டளை என்ற வகையில் கண்ணோக்காதீர்கள்.

2. பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தை, பழைய உடன்படிக்கைக்கு அடிப்படை என்றும் ஆதலால் அது இஸ்ரவேல் மக்களின் வரலாறு என்றும் கண்ணோக்குங்கள்.
   பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தைப் புதிய ஏற்பாடு குறிப்பாக புதுப்பித்துள்ள இடங்கள் தவிர்த்து, அது கிறிஸ்தவர்களை கட்டுவிக்கும் பிரமாணம் என்ற வகையில் கண்ணோக்காதீர்கள்.

3. பழைய பிரமாணத்தில் தேவனுடைய நீதி, அன்பு மற்றும் உயர்ந்த தர

*அளவைகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளதைக் கண்ணோக்குங்கள். தேவனுடைய தர அளவைகளின் கடுமைக்குச் சமமாக அவருடைய இரக்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் காண மறவாதீர்கள்.*

4. *பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தை ஒரு உருமாதிரி - எதிர்பார்க்கப்படும் நடத்தையின் முழுவரைவெல்லைக்கு உதாரணங்களை அளிக்கிறது - என்ற வகையில் கண்ணோக்குங்கள்.*
*பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தை முழுமையானது என்ற வகையில் கண்ணோக்காதீர்கள். நுட்பரீதியாக எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக அது இருப்பதில்லை.*

5. *பிரமாணத்தின் சாராம்சம் (பத்துக் கட்டளைகள்[5] மற்றும் இரு பிரதான பிரமாணங்கள்) தீர்க்கதரிசனங்களில் மீண்டும் உரைக்கப்பட்டுள்ளன மற்றும் புதிய ஏற்பாட்டில் இவைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.*
*பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் தீர்க்கதரிகளாலோ அல்லது புதிய ஏற்பாட்டிலோ அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எதிர்பாராதீர்கள்.*

6. *பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தை இஸ்ரவேல் மக்களுக்கான தாராளக்கொடை என்ற வகையில், கீழ்ப்படியும்போது அதிக ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகிறது என்ற வகையில் கண்ணோக்குங்கள்.*
*பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் அடக்குமுறைச் சட்டங்களின் தொகுதியாக, மக்களின் உரிமையை எல்லைக்குட்படுத்தும், எரிச்சல் மூட்டும் முறைமைகள் என்ற வகையில் கண்ணோக்காதீர்கள்.[6]*

## பஞ்சாகமத்தின் எடுத்துரைப்புப் பகுதிகளுக்கு விளக்கம் அளித்தல்

தோராவின் எடுத்துரைப்புப் பகுதிகளுக்கு[7] விளக்கம் அளித்தலைப் பொறுத்த மட்டில், முற்பிதாக்களினால் - ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரால் - அல்லது தேவனுடைய மக்களை நடத்தியவர்களினால் செய்யப்பட்ட ஒவ்வொரு விஷயமும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் அவைகள் ஒவ்வொன்றும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு உதாரணமாகப் பயன்படுவதை நோக்கங் கொண்டது என்றும் யூகித்தல் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டின் இந்த நாயகர்கள் மனிதர்களாக இருந்தனர் மற்றும் அவர்கள் இன்றைய நாட்களின் மக்களைப் போன்றே பாவத்திற்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர்.

மற்றும் நாம், வேதாகம எழுத்தாளர் ஒரு செயலைக் கண்டனம் செய்யாது இருந்தால், அது அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று யூகிக்க முடியாது. விசுவாசம் மற்றும் தேவபக்தியுள்ள வாழ்வு மீதான பிரசங்கங்களைப் பிரசங்கித்தல் என்பது பழைய ஏற்பாட்டின் எடுத்துரைப்புப் பகுதிகளில் வேதாகம எழுத்தாளர்களின் முதன்மை நோக்கமாக இருக்கவில்லை; அவர்கள் மீட்பின் வரலாற்றைக் கூறினர். சட்டப்படி, அந்த வரலாற்றின் மற்ற விபரங்களை அறிக்கை செய்தது போன்றே

*அறிக்கை மாத்திரம் செய்தனர், அவர்கள் அந்தச் செயலை விமர்சிக்கவோ அல்லது கண்டனம் பண்ணவோ இல்லை.*

*ஆகவே, ஒரு குறிப்பிட்ட செய்கையானது சரியானதா அல்லது தவறானதா - அது நமக்கு ஒரு நல்ல உதாரணமாகப் பயன்படுத்தப்பட முடியுமா அல்லது முடியாதா என்பது - மற்ற காரணிகளைச் சார்ந்துள்ளது. ஏவுதல் பெற்ற எழுத்தாளரால் அது நல்ல உதாரணமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதா இல்லையா, வேதவசனங்களின் வேறிடங்களில் கேட்கப்பட்டுள்ள விரும்பத்தக்க பண்பு ஒன்றை அது விவரிக்கிறதா இல்லையா மற்றும் வேதவசனங்களின் வேறிடங்களில் காணப்படும் தேவனுடைய பிரமாணம் ஒன்றை அது தெளிவாக மீறுகிறதா இல்லையா என்பவற்றை நாம் கவனிக்க வேண்டும்.*

---

*குறிப்புகள்*

[1]Albrecht Alt, "The Origins of Israelite Law," *Essays on Old Testament History and Religion,* trans. R. A. Wilson (Oxford: Basil Blackwell, 1966), 88-89, 103-5. [2]*"பிரமாணம் உருமாதிரியான எடுத்துக்காட்டாக உள்ளது - இது சாத்தியமான ஒவ்வொரு சூழ்நிலையையும் குறிப்பிடுவதன் மூலமல்ல அதற்கு மாறாக ஒரு உதாரணத்தின் மூலம் தர அளவை ஒன்றை அமைக்கிறது"* (Gordon D. Fee and Douglas Stuart, *How to Read the Bible for All Its Worth* [Grand Rapids, Mich.: Zondervan, 2003], 171). [3]Ibid., 165-69. [4]*ஒரு இவ்வசனப்பகுதி வாசிக்கப்படும் வகையில், இது வீட்டின் உரிமையாளர் கள்ளனைக் கொலை செய்யும் நோக்கத்தில் இருக்கவில்லை என்பது போன்று ஒலிப்பதில்லை; அவர் அவனை அடித்தார் மற்றும் அதன் விளைவாக அந்தக் கள்ளன் செத்தான். உள்நுழைபவனைக் கொல்லவேண்டும் என்பது நோக்கமாக இருக்க அவசியமில்லை.* [5]*ஓய்வுநாள் பற்றிய கட்டளை விதிவிலக்காக உள்ளது.* [6]Fee and Stuart, 180. [7]*பிந்திய ஒரு பாடத்தில் எடுத்துரைப்பு வசனப்பகுதிகள் மிகவும் ஆழமாகக் கலந்துரையாடப்படுகின்றன.*

---

## பஞ்சாகமப் புத்தகங்களின் வரைகுறிப்புகள்

### - ஆதியாகமம் -

I. *உலகத்தின் தொடக்கம் (1:1-2:3).*
II. *மனிதனின் தொடக்கம் (2:4-25).*
III. *பாவத்தின் தொடக்கம் (3:1-13).*
IV. *மனிதனை மீட்கத் தேவனுடைய திட்டத்தின் தொடக்கம் (3:14-5:32).*
V. *மீண்டும் தொடக்கம் (6-11).*
VI. *ஆபிரகாமுக்கு உடன்படிக்கையின் தொடக்கம் (12-50).*[1]

### - யாத்திராகமம் -

I. *விடுதலை (1-18).*
II. *உடன்படிக்கை (19-40).*
   A. *கர்த்தருக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கை ஏற்படுத்தப்படுதல் (19:1-24:18).*
   B. *கர்த்தரை இஸ்ரவேல் மக்கள் ஆராதிப்பதற்கு ஆசரிப்புக் கூடாரம் (25:1-40:38).*[2]

## - லேவியராகமம் -

I. *பரிசுத்த பலிகள் (1-7).*
II. *பரிசுத்த நடத்துனர்கள், பகுதி 1 (8-10).*
III. *பரிசுத்த மக்கள், பகுதி 1 (11-15).*
IV. *பரிசுத்த நாட்கள், பகுதி 1: பாவ நிவாரணச் சடங்குகள் (16; 17).*
V. *பரிசுத்த மக்கள், பகுதி 2 (18-20).*
VI. *பரிசுத்த நடத்துனர்கள், பகுதி 2: ஆசாரியர்கள் பிரிக்கப்பட்டு பரிசுத்த மக்களாக இருக்க வேண்டும் (21; 22).*
VII. *பரிசுத்த நாட்கள், பகுதி 2 (23-25).*
VIII. *பரிசுத்த மக்கள், பகுதி 3, மற்றும் முடிவுரை (26; 27).*[3]

## - எண்ணாகமம் -

I. *சீனாய் மலையை விட்டுப் புறப்படத் தயாராகுதல்.*
II. *நாற்பது ஆண்டுகள் எடுத்துக்கொண்ட நாற்பது நாட்கள் பயணம்.*
III. *கானானுக்குள் நுழையத் தயாராகுதல்.*[4]

## - உபாகமம் -

I. *அறிமுகவுரை: வரலாற்று மறுகண்ணோட்டம் (1-4).*
II. *பிரமாணம் மறுகண்ணோக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் (5-26).*
III. *"தெரிவு உங்களுடையதாக உள்ளது: தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஆசீர்வதிக்கப்பட்டிருங்கள் அல்லது தேவனுக்கு கீழ்ப்படியாதிருந்து சபிக்கப்பட்டிருங்கள்" (27-30).*
IV. *முடிவுரை: மோசேயின் கடைசி நாட்கள் (மற்றும் கடைசி வார்த்தைகள்) (31-34).*[5]

---

குறிப்புகள்

[1]Condensed from David Roper, "A Survey of the Old Testament," *Truth for Today* (June 1993): 4-5. [2]Condensed from Coy Roper, *Exodus,* Truth for Today Commentary series (Searcy, Ark.: Resource Publications, 2008), 11-17. [3]Condensed from David Roper, 8. [4]Ibid., 10. [5]Ibid., 12.